பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:70 | 15.02.2024 வியாழக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054

## சிறுவர் துஷ்பிரயோகம் பத்தாயிரம் முறைப்பாடுகள்

இலங்கையில் கடந்த 2023ஆம் ஆண்டு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 10 ஆயிரம் முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலத்தில் 9,434 முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளன.

அவற்றில் குறிப்பாக, 2,242 முறைப்பாடுகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பானவை. 472 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானவை. 404 முறைப்பாடுகள் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானவை.

51 முறைப்பாடுகள் சிறுமிகள் மீதான வன்முறைகள் தொடர்பானவை. 6 முறைப்பாடுகள் சிறுவர்களை ஆபாசத்துக்கு பயன்படுத்தியமை தொடர்பானவை என கூறினார்.

இவை தவிர, சிறுவர்களை போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்துதல், தொழில்களுக்கு அமர்த்துதல், குடும்ப வன்முறையை பிரயோகித்து துன்புறுத்தல், புறக்கணித்தல், கடத்தல், காயப்படுத்துதல், சிறுவர்களை விற்பனை செய்தல், பாடசாலை கல்வியை பெற்றுத் தராதிருத்தல் போன்றவை தொடர்பிலும் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக உரிய திணைக்களங்களுக்கு இந்த முறைப்பாடுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க தற்போது காணப்படும் சில சட்டங்களில் திருத்தம் செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் கூறினார்.

## தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு நீதிமன்றம் தடை



இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்துவதற்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இன்று (வியாழக்கிழமை) இடைக்கால தடைவிதித்துள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேசிய மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவேளை நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் முன்னிலையாகியிருந்தார்.

அதேவேளை யாழ் மாவட்ட நீதிமன்றத்திலும் தடைகோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை உட்கட்சி சூழ்ச்சிகளை முறியடித்து, உடனடியாக மாநாட்டை நடாத்துமாறு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன் னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் ஸ்ரீதரனுக்கு அறிவுறுத்தியதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்



நாடு முழுவதும் பல பகுதிகளில் நாளாந்த எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

காலை 10.00 மணி வரை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் செலுத்தும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் விற்பனை வீழ்ச்சி எரிபொருள் விற்பனை பாரியளவில் குறைந்துள்ளதால் காலை பத்து மணிக்குள் பணத்தை வைப்பு செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் காசோலை வசதியை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை மாநகராட்சி நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் விநியோகஸ்தர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# தனியார் பஸ் நிலைய பிரதான கழிவறைக் கட்டணம் அதிகரிப்பு

புறக்கோட்டை பஸ்டியன் மாவத்தை தனியார் பஸ் நிலையத்தில் பிரதான கழிவறையின் கழிவறை கட்டணம் ரூபா 50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்பு இந்த பொதுக் கழிப்பறையில் சிறுநீர் கழித்தல் உள்ளிட்ட இயற்கைத் தேவைகளை பூர்த்தி செய்ய 40 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொதுக் கழிவறையின் வாடகைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைவாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பொது மலசலகூட பாவனைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

நீர் கட்டண அதிகரிப்புடன் பொது மலசலகூடத்தின் நீரக் கட்டணம் 175,000 ரூபாவினால் அதிகரித்துள்ளதாகவும், மின்சாரக் கட்டணமும் 60,000 ரூபாவினால் அதிகரித்துள்ளதாகவும் இதனால் கழிவறைக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

எவ்வாறாயினும், கொழும்பு மாநகர சபையானது பஸ்டியன் மாவத்தையில் இயங்கும் பொது மலசலகூடங்களின் கட்டணத்தை இன்னும் அதிகரிக்கவில்லை, இன்னும் 40 ரூபாவே அறவிடப்படுகின்றது. இலங்கை போக்குவரத்து சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதான பஸ் நிலையத்தில் உள்ள பொது மலசலகூடங்களின் பஸ் கட்டணம் இதுவரையில் திருத்தம் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றங்களில் 50,000 விவாகரத்து வழக்குகள்

நீதிமன்றங்களில் சுமார் 50,000 விவாகரத்து வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சிதகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 48,391 விவாகரத்து வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காதலர் தினமான நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே நீதியமைச்சர் இதனை தெரிவித்துள்ளார். குறித்த காலப்பகுதியில் மனைவி அல்லது குழந்தைகளுக்கான ஜீவனாம்சம் தொடர்பான 37,514 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

அதேசமயம் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டிற்கு இது ஒரு பெரிய தொகையாக கருதப்படுவதாகவும் நீதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# நாடகமும் அரங்கியலும் முழுநாள் பயிற்சிப் பட்டறை

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி வரை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைதூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், நாளை16 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விபரங்களை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

மேலதிக விபரங்களுக்கு
021 222 2393
077 6692657
077 6393620
ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.


அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விலங்குகள்

மார்ச் 3 அன்று, ஐக்கிய நாடுகள் சபை உலக வனவிலங்கு தினத்தைக் குறிக்கிறது, மேலும் ஒரு அறிக்கையில், வனவிலங்குகளின் கணக்கிட முடியாத மதிப்பை ஐ.நா. உணவு, ஆற்றல், பொருட்கள், மருத்துவம், பொழுதுபோக்கு, உத்வேகம் மற்றும் மனித நல்வாழ்வுக்கான பல முக்கிய பங்களிப்புகளுக்கு காட்டு இனங்களைப் பயன்படுத்துவதன் மூலம், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில், பில்லியன் கணக்கான மக்கள் தினமும் பயனடைவதாக உலக அமைப்பு கூறுகிறது.

உலகளாவிய பல்லுயிர் நெருக்கடி, ஒரு மில்லியன் வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகள் அழிவை எதிர்கொண்டுள்ளது, மக்களுக்கு இந்த பங்களிப்புகளை அச்சுறுத்துகிறது, ஐ.நா எச்சரிக்கிறது. இந்த நாள் காட்டு விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் பல அழகான மற்றும் மாறுபட்ட வடிவங்களைக் கொண்டாடுவதற்கும், அவற்றின் பாதுகாப்பு மக்களுக்கு வழங்கும் பல நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாகும். அதேநேரத்தில், பரந்த அளவிலான பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களைக் கொண்ட வனவிலங்கு குற்றங்கள் மற்றும் மனிதனால் தூண்டப்பட்ட உயிரினங்களின் குறைப்பு ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவையை இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது. இந்த பல்வேறு எதிர்மறை விளைவுகளைக் கருத்தில் கொண்டு, நிலையான வளர்ச்சி இலக்கு: 15 பல்லுயிர் இழப்பை நிறுத்துவதில் கவனம் செலுத்துகிறது. வனவிலங்கு பாதுகாப்புக்கு ஆதரவாக 50 ஆண்டு கால கூட்டாண்மையை ஊக்குவிப்பதைக் குறிப்பிடும் ஐ.நா, “வனவிலங்கு பாதுகாப்புக்கான கூட்டு” என்ற கருப்பொருளின் கீழ், மாற்றத்தை ஏற்படுத்தும் மக்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படும் என்று கூறுகிறது.

கூட்டாண்மைகள் பெரிய அளவில் செயல்படுகின்றன அல்லது சில குழந்தைகள் அல்லது பள்ளியை உள்ளடக்கியவை. சிலருக்கு, ஒரு பாதுகாப்புக் குழுவிற்கு பயனளிக்கும் வகையில் பள்ளி விற்பனையை ஏற்பாடு செய்யலாம், மற்றவர்களுக்கு அது அழிந்து வரும் உயிரினங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த புகைப்படங்களை ஒன்லைனில் வெளியிடலாம். அவை அனைத்தும் சமமாக செல்லுபடியாகும். இந்த ஆண்டு, ஐ.நா ஒரு சிறப்பு கூட்டாண்மையைக் கொண்டாடுகிறது, அழிந்துவரும் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான மாநாட்டின் 50 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

இந்த மாநாடு காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் மாதிரிகள் மீதான சர்வதேச வர்த்தகம் உயிரினங்களின் உயிர்வாழ்வை அச்சுறுத்துவதில்லை என்பதை உறுதிப்படுத்த அரசாங்கங்களுக்கிடையில் ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். இன்று, இது 37,000 க்கும் மேற்பட்ட விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு பல்வேறு அளவிலான பாதுகாப்பை வழங்குகிறது. கடந்த 50 ஆண்டுகளில், CITES இன் இதயத்தில் கூட்டாண்மை உள்ளது, மேலும் இக்கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கு CITES இருந்த பாலத்தை WWD கொண்டாடும், இது நிலைத்தன்மை, வனவிலங்கு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யும்.

இந்த மாநாட்டிற்கு இணங்க, ஐ.நா முகவர்கள், தனியார் துறை நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் பாதுகாப்பு, வனவிலங்குகளின் நிலையான பயன்பாடு மற்றும் சட்டவிரோத வர்த்தகம் மற்றும் வனவிலங்குகளின் அழிவுக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். தற்போதுள்ள கூட்டாண்மைகளை நிலைநிறுத்துவது மற்றும் புதியவற்றை உருவாக்குவது பூமியில் வாழ்வின் எதிர்காலத்திற்கு முக்கியமானதாகும். இயற்கையுடனான நமது உறவை மாற்றி, நாம் இணைந்து செயல்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, 50,000 காட்டு இனங்கள் உலகளவில் பில்லியன் கணக்கான மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன. உலகெங்கிலும் உள்ள ஐந்தில் ஒருவர் வருமானம் மற்றும் உணவுக்காக காட்டு இனங்களை நம்பியுள்ளனர், அதேநேரத்தில் 2.4 பில்லியன் மக்கள் சமையலுக்கு மர எரிபொருளை நம்பியுள்ளனர். இது ஆச்சரியமாகத் தெரிகிறது, ஆனால் கற்றாழை, கடற்பாசிகள், ஓட்டகச்சிவிங்கிகள், கிளிகள் மற்றும் ஓக் மரங்கள் அழிந்து வரும் இனங்களின் குழுக்கள். தற்போது, ஒரு மில்லியன் இனங்கள் அச்சுறுத்தலில் உள்ளன. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, உலகின் 97 சதவீத காட்டுப் புலிகள் அழிந்துவிட்டன.

ஒரு செய்தியில், ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கூறுகையில், உலக வனவிலங்கு தினத்தில், நமது கிரகத்தின் அற்புதமான பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதற்கான நமது பொறுப்பைப் பற்றி சிந்திக்கிறோம். மேலும் எங்களது மோசமான தோல்வியை நாங்கள் அங்கீகரிக்கிறோம். மனித நடவடிக்கைகள் ஒரு காலத்தில் செழித்தோங்கிய காடுகள், விளைநிலங்கள், பெருங்கடல்கள், ஆறுகள், கடல்கள் மற்றும் ஏரிகளில் வீணாகின்றன. வாழ்விட அழிவு, புதைபடிவ எரிபொருள் மாசுபாடு மற்றும் மோசமான காலநிலை நெருக்கடி காரணமாக ஒரு மில்லியன் இனங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. இயற்கைக்கு எதிரான இந்தப் போரை நாம் நிறுத்த வேண்டும். நல்ல செய்தி என்னவென்றால், எங்களிடம் கருவிகள், அறிவு மற்றும் தீர்வுகள் உள்ளன.

# இந்தியாவில் 7 மாவட்டங்களில் இணைய சேவை தடை நீடிப்பு




பஞ்சாப்-ஹரியாணாவின் ஷம்பு எல்லையில் 2 ஆம் நாளாக நேற்றும் ஒன்று திரண்ட விவசாயிகள் டெல்லி சலோ என்ற முழக்கத்தை முன்வைத்து டெல்லி நகரை நோக்கி பேரணியாகச் செல்ல முயன்றனர்.

இதையடுத்து, விவசாயிகளை தடுத்து நிறுத்திய காவல் துறையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கூட்டத்தை கலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால், பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே பயங்கர தள்ளுமுள்ளு ஏற்பட்டது. விவசாயிகளின் போராட்டம் தீவிரமடையாமல் தடுப்பதற்காக, ஹரியாணாவின் அம்பாலா, குருஷேத்ரா, கைதால், ஜிந்த், ஹிசார் ஃபதேஹாபாத் மற்றும் சிர்சா ஆகிய 7 மாவட்டங்களில் இணைய சேவைக்கான தடை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், மொத்தமாக எஸ்.எம்.எஸ் அனுப்புவதற்கும், டாங்கிள் சேவைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மூக்கை நோண்டி பீட்சாவில் வைத்த ஊழியர்




ஜப்பானிலுள்ள டோமினோஸ் கிளை ஒன்றில் பணியாளர் ஒருவர் பீட்சாவிற்கான மாவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்துள்ளார். கையில் க்ளவுஸ் போட்டிருந்தாலும் அதோடே மூக்கை நோண்டி விட்டு மீண்டும் பீட்சா மாவில் கையை வைத்தது பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

ஊழியரின் இந்த சுத்தமற்ற செயல் விமர்சனத்திற்கு உள்ளான நிலையில் டோமினோஸ் நிறுவனம் நடந்த இந்த செயலுக்கு மன்னிப்பு கேட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு சுத்தமான, உயர் ரக உணவுகளை வழங்குவதையே தாங்கள் நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மகாதீர் முகமது, மருத்துவமனையில் அனுமதி



மலேசியாவின் முன்னாள் பிரதமர் மகாதீர் முகமது (98). இவர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் முன்னாள் பிரதமர் மகாதீர் முகமது, முதுமையால் ஏற்படும் உடல் நல பிரச்சினைகள் மற்றும் நோய்த்தொற்றால் சில ஆண்டுகளாக அடிக்கடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவருக்கு இதய நோய் அதிகரித்ததைத் தொடர்ந்து, பைபாஸ் ஆப்ரேசன் செய்யப்பட்டது.

இதையடுத்து, மீண்டும் மருத்துவமனையில் அனுமதி தொடர்பான விசாரணையில் மகாதீரால் கலந்து கொள்ள முடியவில்லை. அதனால், வரும் ஜூலை 19 ஆம் திகதி இவ்வழக்கின் விசாரணையை தொடர்வதாக நீதிபதி கூறினார்.

# எதிர்த்து யாருமே போட்டியில்லை ஆனாலும் தோல்வி



அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்வதற்கான தேர்தலில் எதிர்த்து யாருமே போட்டியிடாத நிலையில் ஒரே ஒரு வேட்பாளர் மட்டும் போட்டியிட்ட நிலையில் அந்த வேட்பாளரும் தோல்வி அடைந்த ருசிகர சம்பவம் தற்போது நடந்துள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதி ஜோபைடனின் பதவிக்காலம் இந்த ஆண்டு பதவி முடிவடைய உள்ளது. இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஜனநாயக மற்றும் குடியரசு கட்சிகள் தீவிரமாக முயற்சி செய்து வருகின்றனர்.

அமெரிக்காவை பொறுத்தவரை ஒவ்வொரு மாகாணத்திலும் ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் தேர்தல் கட்சி உறுப்பினர்களிடையே நடக்கும். அந்த வகையில் நேற்று நெவாடா மாகாணத்தில் குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளர் தேர்தல் நடைபெற்றது. அதில் தொழில்நுட்ப காரணங்களால் ட்ரம்ப் பெயர் இடம் பெறவில்லை, எனவே அவரை எதிர்த்து போட்டியிட்ட நிக்கி ஹாலே என்பவரின் பெயர் மட்டுமே இருந்தது. எனவே அவருக்குத்தான் அனைத்து வாக்குகளும் விழும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் எந்த வேட்பாளரையும் பிடிக்கவில்லை என்ற ஆப்ஷனுக்கு அதிக வாக்குகள் விழுந்து உள்ளது.

# புகையிரத கடவையில் அதிகரிக்கும் விபத்துகள்!



வவுனியா புகையிரத நிலைய வீதியில் காணப்படும் புகையிரத பாதுகாப்பு கடவையில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாது பயணம் செய்வதினால் தினசரி விபத்துகள் அதிகரித்த வண்ணமேயுள்ளது.

வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகே காணப்படும் புகையிரத பாதுகாப்பு கடவையின் கதவுகள் மூடப்பட்டிருக்கும் சமயத்தில் பொதுமக்கள் வீதி போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாது பாதையின் இரு பக்கங்களிலும் சீரற்ற முறையில் வாகனங்களை தரித்து வைத்தல், புகையிரத பாதுகாப்பு கடவை மூடப்பட்டிருக்கும் சமயத்தில் வாகனத்தினை செலுத்துதல், புகையிரத கடவை திறந்தவுடன் எதிர்த்திசையில் வருகின்ற வாகனத்திற்கு வழி விடாது செல்லுதல் போன்ற செயற்பாடுகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக புகையிரத நிலைய வீதியில் தினசரி இரண்டிற்கு மேற்பட்ட விபத்துகள் இடம்பெற்று வருவதுடன் சில சமயங்களில் மாத்திரமே பொலிஸார் குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# குரங்கு தொல்லையை தீர்க்க புதிய தீர்மானம்



குரங்குகளால் விவசாயத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் வகையில் கேகாலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு தமது பரவலாக்கப்பட்ட நிதியில் இருந்து வாயு துப்பாக்கிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

குரங்குகளால் ஏற்படும் சேதத்தினால் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கேகாலை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# ஹுங்கம வீடொன்றுக்கு ரூ.75,000 நீர்க் கட்டணப்பட்டியல்

மாதாந்தம் ஏறக்குறைய ஆயிரம் ரூபா தண்ணீர்க் கட்டணமாக இருந்த ஹுங்கம பகுதியில் உள்ள வீடொன்றுக்கு கடந்த மாதம் 75,000 ரூபா நீர்க் கட்டணம் கிடைத்ததாக வீட்டு உரிமையாளர் டபிள்யூ.எச். கருணாவதி என்ற பெண் தெரிவித்திருந்தார்.

இது குறித்து டெய்லி சிலோன் வினவிய போது, குளிப்பதற்கும், குடிப்பதற்கும் மட்டுமே எடுத்துச் செல்வதாகவும், அதற்கு 4 யுனிட் மட்டுமே செலவாகும் என்றும், நீர்க் கட்டண அதிகரிப்பிற்கு பின்னரும் ஏறக்குறைய ரூ.1,000 தான் தமக்கு நீர்க் கட்டணமாக வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.



தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில் "கடந்த 11 ஆம் திகதி நீர்க் கட்டணப் பட்டியல் எழுதுபவர் வீட்டிற்கு வந்து நீர் கட்டண பட்டியலை கொடுத்தார். நீர் கட்டண பட்டியல் 75,000 ரூபாய் என்பதை அறிந்ததும் என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை.

ஹுங்கம ஹதகல நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பராமரிப்பு அலுவலகத்தில் குறித்த பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுபற்றி பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, முறைப்பாடு குறித்து விசாரணை நடத்த நேரில் வீட்டுக்குச் செல்வதாக தெரிவித்தார்.

# நயினாதீவில் சுமார் 20 கிலோ கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம், நயினாதீவில் 20 கிலோ மற்றும் 140 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவு கடற்கரையில் கஞ்சா இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கு அமைய சம்பவ இடத்திற்கு கடற்படையுடன் இணைந்து விரைந்த விசேட அதிரடிப் படையினர் 20 கிலோ மற்றும் 140 கிராம் கஞ்சாவினை கைப்பற்றினர்.

இதனை அடுத்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (13) காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் அதாவுல்லாவுக்கு என்ன வேலை?



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா வந்து கலந்து கொண்டு மாவட்ட பிரச்சினைகளை பேச விடாது தடுக்கிறார் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன் தெரிவித்துள்ளார். இன்று (14) அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதாவுல்லா எவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார் என்று தெரியவில்லை இவருக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக எதுவும் தெரியாது.

கடந்த காலக் கூட்டங்களில் ஒவ்வொரு தலைப்பிலும் பேசி ஆராயப்படும் அதாவது கல்வி, சுகாதாரம், விவசாயம் என வரும் அதன் ஒழுங்கில் கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்வு காணப்படும்.

ஆனால் தற்போதைய கூட்டத்தில் சரியான ஒழுங்கில் கூட்டம் இடம்பெறாது அவர்களுக்கு ஏற்றாற்போல் கூட்டத்தை நடத்துகின்றார்கள் என சாணக்கியன் தெரிவித்தார்.

# குடு சலிந்துவின் பிரதான சகா இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்



பாதாள உலக தலைவர்களில் ஒருவரான 'குடு சலிந்து' எனப்படும் சலிந்து மல்ஷிகவின் பிரதான சகாவான ம் ஹஸ்திக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட குழுவினால் இன்று (15) அதிகாலை டுபாயில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பொது பாதுகாப்பு அமைச்சு இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

# நான் பெற்ற இந்த அறிமுக தொப்பியை அவருக்காக டெடிகேட் பண்றேன் - துருவ் ஜுரேல்

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியானது இன்று ராஜ்கோட் நகரில் துவங்கி நடைபெற்று வருகிறது. இப்போட்டியில் டாசில் வெற்றி பெற்ற இந்திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா முதலில் தங்களது அணி பேட்டிங் செய்யும் என்று அறிவித்தார். அதன்படி இந்திய அணி தற்போது தங்களது முதல் இன்னிங்ஸை விளையாடி வருகிறது. இப்போட்டிக்கான இந்திய அணியின் பிளேயிங் லெவனில் சில மாற்றங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் நான்கு முக்கிய மாற்றங்களை ரோஹித் சர்மா செய்திருந்தார். காயமடைந்து வெளியேறிய ஷ்ரேயாஸ் ஐயருக்கு பதிலாக சர்ஃபராஸ் கானும், விக்கெட் கீப்பர் பேட்ஸ்மனான கே.எஸ் பரத்திற்கு பதிலாக துருவ் ஜூரேல் ஆகிய இருவரும் இன்றைய போட்டியில் அறிமுக வீரர்களாக தங்களது முதல் வாய்ப்பினை பெற்றனர்.





இந்திய அணிக்காக 312 ஆவது டெஸ்ட் வீரராக விக்கெட் கீப்பர் பேட்மேன் துருவ் ஜூரேல் அறிமுகமானார். 23 வயதான துருவ் ஜூரேல் உத்தரப்பிரதேச அணிக்காக விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனாக அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியவர்.

அதோடு 15 முதல்தர போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 46.47 சராசரியுடன் மிகச் சிறப்பான ஆட்டத்தை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி உள்ளார். அதோடு கடந்த ஆண்டு ஐ.பி.எல் தொடரிலும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்காக பின்வரிசையில் பினிஷராக களமிறங்கிய அவர் 13 போட்டிகளில் 172 ஸ்ட்ரைக் ரேட்டுடன் 152 ஓட்டங்களை குவித்து அசத்தியதாலே அவர் பலராலும் அறியப்பட்ட வீரராக மாறினார். அதோடு 19 வயதுக்குட்பட்டோர் இந்திய அணிக்காக கடந்த 2020 ஆம் ஆண்டு துணை கப்டனாகவும் செயல்பட்ட அவர் சமீபத்தில் ரஞ்சி கோப்பை போட்டிகளிலும் மிகச் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தினார்

சிறப்பான செயல்பாடுகள் காரணமாகவே அவருக்கு இந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தனக்கு கிடைத்த வாய்ப்பில் சொதப்பிய கே.எஸ் பரத்திற்கு ஓய்வு அளிக்கப்பட்டு அவருக்குப் பதிலாக இம்முறை விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனாக துருவ் ஜூரேலுக்கு அறிமுக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. போட்டிக்கு முன்னதாக தனது அறிமுக தொப்பியை கைப்பற்றிய அவர் தனது மகிழ்ச்சியை கண் கலங்கியபடி வெளிப்படுத்தியிருந்தார். ஒரு வேளை இந்திய அணியின் அறிமுக தொப்பியை பெற்றால் அதனை எனது தந்தைக்காக தான் டெடிகேட் செய்வேன். ஏனெனில் என் தந்தை இல்லை என்றால் நான் இங்கு நின்று இருக்க முடியாது. என் தந்தை தான் என்னை வழிநடத்தி இவ்வளவு தூரம் பயணிக்க வைத்திருக்கிறார். அவரே என்னுடைய ஹீரோ என நெகிழ்ச்சியாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முத்தமிட்ட அப்பா... மனைவியின் கண்ணீரை துடைத்த சர்பராஸ் கான்

இந்திய அணியில் காயமடைந்த கே.எல். ராகுலுக்கு பதிலாக இளம் வீரர் சர்பராஸ் கான் அறிமுகமாக களமிறங்கும் வாய்ப்பை பெற்றார். அதே போல சுமாராக விளையாடி வந்த விக்கெட் கீப்பர் கே.எஸ். பரத் நீக்கப்பட்டதால் இளம் வீரர் துருவ் ஜூரேலுக்கு அறிமுகமாக களமிறங்கும் வாய்ப்பு கிடைத்தது. அந்த 2 வீரர்களுக்கும் முன்னாள் இந்திய ஜாம்பவான் வீரர் அனில் கும்ப்ளே மற்றும் தினேஷ் கார்த்திக் ஆகியோர் வாழ்த்துடன் அறிமுகத் தொப்பியை வழங்கினர். அப்போது சர்பராஸ் கான் மற்றும் துருவ் ஜூரேல் ஆகியோருடைய குடும்பத்தினரும் மைதானத்தில் இருந்தனர். அதில் தன்னுடைய மகன் மிகவும் போராடி இந்தியாவுக்காக அறிமுகமானதை நினைத்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் சர்பராஸ் கான் தந்தை கண் கலங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அவரிடம் தன்னுடைய அறிமுக இந்திய தொப்பியை சர்பராஸ் கான் அருகில் சென்று காண்பித்தார். அந்த தொப்பியை கையில் வாங்கி தொட்டுப் பார்த்த சர்பராஸ் கான் தந்தை கண்ணீர் விட்டுக் கொண்டே முத்தமிட்டது அனைவரையும் நெகிழ்ச்சியடைய வைத்தது. அவரை கட்டியணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திய சர்பராஸ் கான் அப்படியே அருகில் ஆனந்தக் கண்ணீர் விட்ட தம்முடைய மனைவியின் கண்களையும் துடைத்து அன்பைக் காட்டியது மைதானத்தில் இருந்த அனைவரையும் உணர்ச்சியில் ஆழ்த்தியது.







சமீபத்திய வருடங்களாகவே தொடர்ந்து ரஞ்சிக் கோப்பையில் சிறப்பாக விளையாடிய வந்த சர்பராஸ் கானுக்கு சீனியர்கள் இருந்ததால் இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்காமல் இருந்தது. ஆனாலும் தொடர்ந்து கடினமாக போராடிய தங்களுடைய மகன் ஒரு வழியாக இந்திய அணிக்கு இன்று அறிமுகமானதாலேயே சர்பராஸ் கான் அப்பா இந்தளவுக்கு உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் விட்டு வாழ்த்து தெரிவித்தனர் என்றே சொல்லலாம். அதேபோல துருவ் ஜூரேலுக்கும் அவருடைய குடும்பத்தினர் வாழ்த்து தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் விராட் கோலி, ராகுல் போன்ற முக்கிய பேட்ஸ்மேன்கள் இல்லாமல் இந்த இளம் வீரர்களுடன் களமிறங்கியுள்ள இந்திய அணி இங்கிலாந்தை தோற்கடித்து முன்னிலை பெறுவதற்காக விளையாடி வருவது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 15.02.2024 அன்று வெளியிடப்பட்டது.